# மெட்ரோ ரயில் 2ம் திட்டம் நில எடுப்பு குறைக்க முடிவு

**சென்னை, ஏப். 27–** மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்தில், குறைவான நிலங்களை கையகப்படுத்தி, நிலைய கட்டுமான அளவை குறைக்க, நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரண்டாவது திட்டத்தில், 69,180 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், மெட்ரோ ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளன.

மாதவரத்தில் இருந்து, சிறுசேரி சிப்காட் வரை, 45.8 கி.மீ., கலங்கரை விளக்கத்தில் இருந்து, பூந்தமல்லி பை – பாஸ் சாலை வரை, 26.1 கி.மீ., பாதை அமைய உள்ளன.

மாதவரத்தில் இருந்து, சோழிங்கநல்லூர் வரை, 47 கி.மீ.,யும் சேர்த்து, மொத்தம், 118.9 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை, இரண்டாம் கட்ட திட்டத்தில் அமைக்கப்பட உள்ளன. மூன்று பாதைகளிலும், 128 நிலையங்கள் அமைகின்றன.

இத்திட்டத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பணிக்காக, நில உரிமையாளர்கள், 2,970 பேருக்கு, 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டு, விசாரணையும் முடிந்துள்ளது.

தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்படுவதற்கு, மூன்று பாதைகளிலும், 2,865 குடும்பங்களை அப்புறப்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

இத்திட்டத்திற்கு, அரசு நிலம், 231.76 ஏக்கர், தனியார் நிலம், 67.18 ஏக்கர் மட்டுமே எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரம், சிப்காட், பூந்தமல்லியில், பணிமனை வளாகங்கள் முன் திட்டமிட்டதை விட, இட அளவுகளை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்துக்கு, தனியார் நிலங்களை, எந்தளவு குறைக்க முடியுமோ, அந்தளவு குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில், நிலையங்கள், 220 மீ., நீளத்தில் அமைக்கப்பட்டது. அதற்கு, அதிகளவில் நிலம் தேவைப்பட்டது.

இரண்டாவது திட்டத்தில், சுரங்க ரயில் நிலையம், 150 மீ., நீளம், 21.40 மீ., அகலம், தரைக்கு மேல் அமைக்கப்படும் நிலையம், 140 மீ., நீளம், 37.4 மீ., அகலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நிலையங்கள், ஆறு வடிவங்களில் அமைக்க, பரிந்துரை செய்யப்பட்டு உள்ளன. நிலையத்தையொட்டி, பயன்பாட்டு இடங்களின் அளவும் குறைக்கப்பட்டு உள்ளது.

இந்த நடவடிக்கைகளால், தனியார் நில எடுப்பு குறைக்கப்படும்.

மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில், தரைக்கு மேல் மேம்பாலங்களில் நிலையங்கள் அமைக்கப்படும் போது, சில நிலையங்கள், ரயில் பாதைக்கு கீழ் அமைக்கப்படாமல், இடது, வலது ஓரங்களில் அமைக்கப்பட்டன.

இரண்டாவது திட்டத்தில், ரயில் பாதைக்கு கீழ், நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், தனியார் நிலம் கையகப்படுத்தும் பரப்பளவு, மேலும் குறையும்.

இவ்வாறு, அந்த அதிகாரி கூறினார்.

**மூன்று பாதைகளுக்கான செலவு!**

| பாதை | நீளம் (கி.மீ.,) | செலவு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| மாதவரம் – சிறுசேரி சிப்காட் | 45.8 | 29,192 |
| கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி | 26.1 | 14,761 |
| மாதவரம் – சோழிங்கநல்லூர் | 47 | 16,382 |